2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

பிப்ரவரி மாத இதழ்

# என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

யோவேல் 2:27

# MY PEOPLE NEVER BE ASHAMED.

Joel 2:27

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | FEB |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 லட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

# இந்த மாத வாக்குத்தத்தம்

**'என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போவதில்லை'.**
**யோவேல் 2:27**

**வாக்குத்தத்த செய்தி:**

**'வெட்கப்பட விடமாட்டார்'**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த ஆண்டு தேவன் 1 மாதத்தை கடந்து 2வது மாதத்தில் பிரவேசிக்க கிருபை பாராட்டினார். தேவன் உங்களை விட்டு விலகமாட்டார். உங்களை கைவிடமாட்டார்.

இந்த மாதம் எந்த ஒரு காரியத்திலும் நீங்கள் வெட்கப்பட்டு போக தேவன் விடமாட்டார்.

தேவன் உங்கள் நடுவில் இருந்தால் நீங்கள் வெட்கப்பட்டு போக மாட்டீர்கள்:

**1) துதிக்கும் இடத்தில், பாடும் இடத்தில் – சகரியா 2:10**

துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிற தேவன் நாம் எந்த இடத்திலும் முழு இருதயத்தோடு துதித்தால் அந்த இடத்தின் மத்தியில் தேவ பிரசன்னத்தை உணர முடியும். முறுமுறுப்பை அகற்றி விட்டு குறை சொல்வதை விட்டுவிட்டு துதிக்க ஆரம்பியுங்கள். உங்கள் நடுவில் வாசம்பண்ணுகிற தேவன் உங்களை வெட்கப்பட விடமாட்டார்.(சங் 34:1)

**2) பரிசுத்தமுள்ள இடத்தில் – ஏசா 12:6**

பரிசுத்தமில்லாமல் ஒருவரும் அவரை தரிசிக்க முடியாது. தேவன் நம் நடுவில் இருக்க வேண்டுமானால் நாமும் நம் குடும்பமும் பரிசுத்தத்தை காக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் பாவம் செய்த போது தேவன் பாளையத்திற்கு வெளியே போய்விட்டார். நீங்களும், உங்கள் குடும்பமும், சபையும் தேவன் விரும்புகிற பரிசுத்தத்தோடு காணப்பட்டால் அந்த இடத்தில் (நடுவில்) தேவன் வாசம்பண்ணுவார்.



எப்போழுதும் துதித்து பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டால் உங்கள் நடுவில் வாசம்பண்ணுகிற தேவன் உங்களை காத்து வெட்கப்பட விடமாட்டார்.

**Rev. Dr. J. Samuel Jebaraj**



# விசுவாசத்தில் கூப்பிடு

**ஆண்கள் பகுதி**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புருஷர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**



ஒருவர் தன்னுடைய தொழிலில் நஷ்டம் ஏற்பட்ட போது தன்னுடைய நண்பர்கள், உறவினர்கள், தனக்கு தெரிந்தவர்களிடத்தில் போய் நஷ்டத்தில் இருந்து வெளிவர அவர்களிடத்தில் உதவியை எதிர்பார்த்தார். அவர்களோ உதவி செய்யவில்லை. அவர் மனம் உடைந்து போனார்.அவரோ நஷ்டத்தில் இயேசுவை தேடாமல் கண் குருடராக்கப்பட்டவராய் மனிதரிடத்தில் உதவியை எதிர்பார்த்தார். நாமும் சில சமயங்களில் அப்படிதான் இருக்கிறோம்.

ஆனால் வேதத்தில் பர்திமேயு என்கிற குருடன் மாற்கு 10:47,48 –ல் இயேசு வருகிறார் என்று கேள்விபட்டு விசுவாசத்தோடு "இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என்று கூப்பிட்டான். அவன் பார்வையடைந்தான். எரேமியா 33:3– ன் படி "என்னை நோக்கிக் கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று சொன்னது போல, நாமும் நம்முடைய தொழிலிலோ, கடன் பிரச்சனைகளிலோ, அற்புதம் கிடைக்கும் வரை அந்த பர்திமேயு குருடன் விசுவாசத்தோடு கூப்பிட்டது போல கூப்பிடுவோம். அற்புதத்தை பெற்று கொள்வோம்.



## புருஷர் ஐக்கிய கூட்டம்

**திங்கட்கிழமை தோறும்**
**இரவு 8.00 –8.45 மணி வரை**

**இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..**



பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெயராஜ்

# தேவன் தந்துள்ள பொக்கிஷங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பெண்களாகிய உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு நாளும் கர்த்தர் நம்மைக் கிருபையாய் நடத்திக் கொண்டு வருகிறார். வேதனை நிறைந்த இந்த உலகில் தேவனுக்காய் வைராக்கியமாய் வாழும் கிருபையைத் தந்துள்ளார். அவருக்கே எல்லா புகழும் மகிமையும் உண்டாவதாக. தேவன் பொக்கிஷமாய் அநேக காரியங்களை நமக்குத் தந்துள்ளார். அதில் சில காரியங்களைப் பார்ப்போம்.

**1. வேத வசனம்:** நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிக மிக முக்கியமான பொக்கிஷம் வேத வசனம், கர்த்தருடைய வார்த்தை. இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைகொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது. வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. வேத வசனம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருக்கிறது. வசனம் தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளித்தேனிலும் மதுரமானது. பெண்களே! வேதத்திலே கவனம் செலுத்துங்கள். வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு. அவர்களுக்கு இடறலில்லை. பொக்கிஷமாகிய வேத வசனங்களை இருதயத்தில் காத்துக் கொள்ளுங்கள்.

**2.வல்லமை:** இரண்டாவது பொக்கிஷம் பரிசுத்த ஆவியானவரின் மூலம் நமக்குக் கிடைக்கிற வல்லமை ஆவியானவரை இழந்து விடக் கூடாது. பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிற சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூர்குணமும், தூஷணமும் இவைகளை விட்டு விலகி, உங்களை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுங்கள். ஆவியானவருடைய வல்லமையில்லாமல் உலகில் உள்ள எந்த ஒன்றையும் ஜெயிக்க முடியாது.ஜெயம் பெற்ற பெண்மணியாக திகழ பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்றுக் கொள்ளுங்கள். இந்த பொக்கிஷத்தைக் கடைசி வரைக்கும் காத்துக் கொள்ளுங்கள்.

**3.அதிகாரம்:** அடுத்த பொக்கிஷம் தேவன் நமக்குத் தந்துள்ள அதிகாரம். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, நீதிமான்களாய், பரிசுத்தமுள்ளவர்களாய் மாற்றப்பட்ட ஒவ்வொருவருக்கும், பாவத்தை, உலகத்தை, பிசாசை, சத்துருக்களை, போராட்டங்களை, நமக்கு எதிராய் வரக் கூடிய எல்லாவற்றையும் மேற்கொள்ளக் கூடிய அதிகாரத்தை நமக்குத் தந்துள்ளார். பெண்களாகிய நாம் இதை விசுவாசித்து, தேவன் தந்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது, எல்லாவற்றையும் மேற்கொண்டவர்களாய் சகலத்தையும் செய்து முடிக்க திராணியுள்ளவர்களாய் காணப்படுவீர்கள். இயேசுவின் நாமம், இயேசுவின் இரத்தம் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளுங்கள்.



பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை 10:00 -11:30 மணி வரை நமது சபையில் வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING

வாலிபர் பகுதி

# 2025 புது வருடம் புது ரசம்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்




கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபர்களுக்கு, சபையின் வாலிபர் ஐக்கியம் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புது வருடம் என்றாலே இந்த வருடத்தில் இருந்து, புதிதாக ஏதோ ஒன்று செய்யலாம், எதிர்பார்க்கலாம் என்ற எண்ணங்கள் காலம் காலமாக ஒரு கலாச்சார வழக்கம் ஆகிவிட்டது. ஒரு நல்ல காரியம் வழக்கமாவதில் தவறில்லை. எத்தனையோ பேர் எவ்வளவோ புதிய தீர்மானங்கள் எடுத்து ஆவலாக தயார் ஆகி இருப்பார்கள் – என் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை, வெற்றியை காண வேண்டும் என்று பாராட்ட வேண்டிய விஷயம் தான். பிரயாசம் வேண்டும் அல்லவா! இன்னொரு கூட்டம் உண்டு – 'அடேய், புது வருஷம் வந்த எல்லாம் புதுசு ஆகிருமா? போயி வேலைய பாருங்கடா ' என்று.

சற்று யோசித்து பார்த்தால் அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது தானே? வருடம் மாறுகிறது ஆனால் அதே மாதங்கள், அதே தேதிகள். வருடம் மாறுகிறது ஆனால் அதே பள்ளிக்கூடம், அதே கல்லூரி, அதே வேலை செய்யும் இடம். வருடம் மாறுகிறது ஆனால் அதே பழைய பழக்கங்கள் தான் நம்மிடமும். பல்வேறு துறையில் சாதித்தவர்களும் அறிஞர்களும் சொல்லும் மற்றும் பின்பற்றும் ஒரு கூற்று என்ன தெரியுமா?– **YOUR DAILY HABITS SHAPE YOUR IDENTITY** (நம் தினசரி பழக்கங்கள் தான் நாம் யார் என்றே தீர்மானிக்கும்).



**எபிரெயர் 12:11** சொல்கிறது 'எந்த சிட்சையும் **(Discipline)** தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.'

வசனம் துல்லியமாக சொல்வது ஒன்று தான் – அதில் பழகினவர்களுக்கே பலன் என்று ! பிரயாசம் மட்டும் போதாது, முயற்சி மட்டும் போதாது. ஏன் என்றால் இந்த இரண்டையும் முடக்க பிசாசு அவனுடைய சிறந்த முயற்சியை செய்வான். பிசாசினால் எளிதில் முடக்க முடியாத ஒன்று உண்டானால், அது நம் ஒழுக்கம் **(Discipline)**. ஒழுக்கத்தில் தேறின ஒருவர் அத்தனை சீக்கிரத்தில் விழுந்துவிடமாட்டார். **Discipline** என்பது ஒரு சேமிப்பு போல. நாம் இடற நேரிடும் போது, அது நமக்கு பெலனாக இருக்கும்.




நம் அன்றாட பழக்கங்கள் மாறாத வரை எத்தனை புது வருடம் வந்தாலும் நம் வாழ்க்கை மாறாது. ஒரு தீர்மானம் எடுங்கள் ஆனால், அதை விட முக்கியமாக அதில் பழகுங்கள். உங்கள் அடுத்த நாள் என்பது , முந்தின நாள் இரவில் தொடங்குகிறது.

**வருகிற மாதங்களில் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் எப்படி ஒழுக்கமாக இருப்பது என்று பார்க்கலாம்.**

**GOD BLESS YOU...**

*ZOOM YOUTH FELLOWSHIP*
*FORWARDING ARMY*
**EVERY WEDNESDAY @ 9.00 PM**

MEETING ID: 337 022 2215
PASSCODE: 1234

SCAN & JOIN



# நம்மைக் காக்கும் தேவன்

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

**சிறு பிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**



விடுமுறை வந்துவிட்டது, ஜோதியும் அவளுடைய நண்பர்களும் ஜோதியினுடைய தோட்டத்துக்குச் சுற்றுலா செல்ல திட்டமிட்டார்கள். ‘அம்மா நாங்க தோட்டத்துக்குப் போயிட்டு வரலாமா?’ என்று அனுமதி கேட்டாள் ஜோதி.‘சரி,நாளைக்கு ஏதாவது பலகாரம் செய்து தாரேன், நீங்க எல்லாருமா போயிட்டு வாங்க, ஆனா கவனமாயிருக்கனும், தோட்டத்துக்குள்ளே ரொம்ப தூரம் போயிடக் கூடாது. இருட்டுவதற்கு முன்னால் வீடு திரும்பிடனும்’ என்று எச்சரித்தார்கள் அம்மா.



மறுநாள் காலை ஜோதி, மேரி,குமார்,எட்வர்ட் நால்வரும் அம்மா கொடுத்த பலகாரத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அப்போது ஜோதியின் வீட்டு நாய் அவர்களுடன் வரப்புறப்பட்டது. தோட்டத்தில் மா, பலா, கொய்யா போன்ற பல மரங்கள் இருந்தன. மரங்களில் ஏறி விளையாடினார்கள். பழங்களைப் பறிப்பதற்கு தோட்டக்காரனுக்கு உதவினார்கள்.



மதிய வேளை வந்தது. நால்வரும் கொண்டு போயிருந்த பலகாரங்களையும், பழங்களையும் சாப்பிட்டார்கள். பிறகு மறுபடியும் ஒரு கூரையின் அடியில் இருந்த வைக்கோற்போரில் ஒளிந்து விளையாடினர். ‘டேய் இன்னும் தோட்டத்துக்குள்ளே போகலாம் வாடா ’ என்று கூப்பிட்டான் எட்வர்ட். பிள்ளைகளே, ரொம்ப தூரம் போயிடாதீங்க. காடு பக்கத்திலே தான் இருக்குது. அதற்குள்ளே போயிட்டா வழி தெரியாமல் போய் விடும்’ என்று எச்சரித்தான் தோட்டக்காரன். ‘சரி’ என்று தலையாட்டிவிட்டு நால்வரும் புறப்பட்டனர்.



உயர்ந்த மரங்களையும், பலவிதமான பறவைகளையும் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.அந்த சுவாரஸ்யத்தில் காட்டுக்குள் போய்விட்டார்கள். மரங்கள் அடர்ந்து இருப்பதைக் கண்டவுடன் திரும்ப நினைத்தார்கள். ஆனால் வழி தெரியவில்லை. மேரி அழ ஆரம்பித்துவிட்டாள். உடனே குமார், ‘பயப்படாதே, தேவன் நமக்கு உதவி செய்வார்’ என்று கூறி அவளைத் தேற்றினான். நால்வரும் முழங்கால்படியிட்டு ஜெபித்தார்கள். **‘தேவனே, நாங்கள் அம்மா பேச்சைக் கேட்காமல் ரொம்ப தூரம் வந்துவிட்டோம். எங்களை மன்னியும், வீட்டுக்குப் போக வழி காண்பியும்’** என்றனர். அப்போது ‘வௌ... வௌ’ என்ற சத்தம் கேட்டது. ஜோதி, ஜிம்மியை சந்தோஷத்தில் கட்டிக் கொண்டாள். ஜிம்மி வழிகாட்ட நால்வரும் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அப்பா காத்திருந்தார். எல்லாருமாக தேவனுக்கு **நன்றி செலுத்தினார்கள்.**



**பிள்ளைகளே! தேவன் சரியாக தோட்டம் வந்து சேர உதவி செய்தார். இந்த புதிய ஆண்டில் தேவன் நம்மையும் சரியான பாதையில் நடத்த நாம் ஜெபம் செய்வோமாக.கர்த்தர் தாமே சிறு பிள்ளைகளாகிய உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.**

**மனப்பாட வசனம்:**
**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன். சங்கீதம் 50:15**

**சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.**

**CHILDREN'S TIME**
*வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.*

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

**நமது சபை தாங்கும் 37 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.**

**மாதம் தேவை: ரூ.1,87,100** **பொறுப்பு: Bro. அர்னால்டு**



*Pr. Daniel Babu* — Gujarath
*Pr. Stephen Rathod* — Rajasthan
*Pr. Mandeep kidhay* — Moga
*Pr. Chaman Masih* — Ablowal
*Pr. Binu Vijayan* — Tripuri
*Pr. SawarGill* — Gurdaspur
*Pr. Peter Masig* — Taran Taram
*Pr. Sandeep Singh* — Chunnai Kalan
*Pr. Inderjit Singh* — Mohali
*Pr. Prasenjit Basumatary* — Assam
*Pr. Karthick* — Chandigarh
*Pr. Gurdial Singh* — Dehriwal Droga
*Pr. Rajkumar* — Kurali
*Pr. Rajesh* — Mahatpur
*Pr. Simson* — Karnataka
*Pr. Happy Masih* — Sarspur
*Pr. Jirma Lal* — Bazara
*Pr. Caleb* — Delhi
*Pr. Heral Kaddara* — Rajasthan
*Pr. Arionp Kumar* — Ajimar
*Pr. Kamal Deep* — Punjab
*Pr. Godson Joy* — Punjab
*Pr. Harjeet Kaur* — Nawashar
*Pr. Jaswinder Kumar* — Delhi
*Pr. Pritam Singh* — Rajasthan
*Pr. Sonu* — Makhu
*Pr. Patras Masih* — Feruyzepur
*Pr.Dhananjay Nokman* — Assam
*Pr. Jinod Rabha* — Assam
*Bro. Prakash* — Shalom Charity Trust
*Sis. Sugantha* — Shalom Charity Trust
*Bro. Joshua Bhuriya* — Shalom Charity Trust
*Sis. Karuna K. Damor* — Madhya Pradhesh

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

| | |
|---|---|
| Name | : Assembly of God Church, Pudukottai. |
| Bank | : TMB |
| A/c No. | : 035100050313093 |
| IFSC Code | : TMBL0000035 |
| Branch | : Pudukottai, Tuticorin. |

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
| --- | --- | --- |
| 01 | Bro. **வேதமுத்து,** Sis. **கவிதா** | 16 |
| 02 | Bro. **தனராஜ்,** Sis. **எஸ்தர்** | 18 |
| 03 | Bro. **அற்புதராஜ்,** Bro. **யாக்கோபு** | 19 |
| 04 | Pr. **ராஜன்,** Sis. **கோயில் செல்வி** | 24 |
| 05 | Bro. **ரூபன்,** Sis. **பேன்சி** | 16 |
| 06 | Bro. **சாமுவேல் பீட்டர்,** Bro. **பால்** | 14 |
| 07 | Sis. **ஜெயா ,** Sis.**அமுதா** | 10 |
| 08 | Sis. **மேரி செல்வி,** Sis. **தேன்மொழி** | 15 |
| 09 | Sis. **வசந்தா ,** Sis. **காஞ்சனா** | 16 |
| 10 | Sis. **சாராள் ஜெயராணி,** Bro. **சதீஷ்** | 12 |
| 11 | Sis. **பொன்செல்வி,** Bro. **அலெக்ஸ்** | 19 |
| 12 | Bro. **ஜெபஞான குணசிங்,** Bro. **இம்மானுவேல்** | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

● நான் தமிழ்நாடு வங்கி தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் நிலை தேர்வில் தேர்ச்சிப் பெற்று, Interview க்கு தேர்வு ஆனேன். Interview நடக்கும் போது Bio-Metric இல் என்னுடைய கைரேகை match ஆகாததால் என்னை waiting list ல் வைத்தனர். அப்போது நான் தேவனிடத்தில் ஜெபம் பண்ணினேன். மறுபடியும் என்னை Interviewக்கு கூப்பிடும் போது முதல் முறை 1% கூட match ஆகாத என் கைரேகை 98% match ஆனது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக...

● நாங்கள் குடும்பமாக தூத்துக்குடிக்கு காரில் சென்று இருந்தோம். திரும்பி வரும்போது கார் டயர் வெடித்துவிட்டது. ஆனால் எந்தவித சேதமும் இன்றி கர்த்தர் எங்களை பாதுகாத்தார்.கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

● எனக்கு C-Section என்பதால் அதிகமாக முதுகு வலி மற்றும் தையல் போட்ட இடத்தில் வலி இருந்தது. 21 நாள் உபவாச ஜெபத்தில் அதற்காக ஜெபித்தேன், ஜெபிக்கும் போதே என்னுடைய பெலவீனம் மாறியது.எனக்கு இப்போது எந்த வலியும் இல்லை.எனக்கு அற்புதமாக சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

- செல்விகா, நடுகூட்டுடங்காடு

● கடந்த நாட்களில் என் அப்பா வேலை செய்யும் இடத்தில் கீழே விழுந்து மூட்டுப்பகுதியில் பலமான அடி விழுந்து , மூட்டுசரட்டை விலகி நடக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். பாஸ்டரம்மாவிடம் ஜெபிக்க கேட்டுக்கொண்டோம். மூட்டுபகுதி ஒன்று சேர வேண்டும் என்று ஜெபித்தார்கள். வைத்தியரே ஆச்சரியப்படும்படி தேவன் அற்புதம் செய்தார்.நல்ல வேலையும் தந்து தேவன் ஆசீர்வதித்தார். என் தேவாதி தேவனுக்கு நன்றி...

- கோயில் செல்வி, சிவஞானபுரம்


## A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 934571 2349

விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.

## அமாவாசை ஜெபம்

27 பிப்ரவரி வியாழன்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. **சாந்தா**

**பிப்ரவரி 2025**
**யோவேல் - ஒபதியா அதிகாரம் வரை**
**(வசன இருப்பிடம் எழுதவும்)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | | |
| 3 | | | | | | 4 |
| | | 5 | 6 | | | |
| 7 | | | | 8 | | |
| | | | 9 | | | |
| | | | | | | 10 |
| 11 | 12 | 13 | | | | 14 |

**வலமிருந்து இடம்**

01. கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே எது இருளாகவும் மாறும்?
05. அவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திலே போய் மறைந்து கொண்டாலும் அவர்களைக் கடிக்க எவைகளுக்கு கட்டளையிடுவேன் என்கிறார்?
10. அவர் எதை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறவர்?
14. அவர்கள் யாரைப் பணத்துக்கும் விற்றுப்போட்டார்களே?

**இடமிருந்து வலம்**

02. எந்த மரம் சாரமற்றுப் போகிறது?
03. நீங்கள் எந்தகற்களால் வீடுகளைக் கட்டினீர்கள் என்கிறார்?
06. யூதா புத்திரரின் தேசத்திலே செய்த கொடுமையினிமித்தம் எது பாழாய்ப் போகும் என்கிறார்?
07. கருக்கயினாலும், எந்தப் பனியினாலும் உங்களைத் தண்டித்தேன் என்கிறார்?
09. நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல என்றது யார்?

**மேலிருந்து கீழ்**

02. எது வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப் போட்டது?
04. ஆனாலும் ஒரு எந்த மணியும் தரையிலே விழுவதில்லை என்கிறார்?
06. கர்வாலி மரங்களைப் போல் வைரமுமாயிருந்த யாரை அழித்தேன் என்கிறார்?
07. எது மண்கட்டிகளின் கீழ் மக்கிப் போயிற்று?

**கீழிருந்து மேல்**

08. எதின் மதிலுக்குள் தீக் கொளுத்துவேன், அது பெருங்காற்றின் புசலாகவும்,அதின் அரமனைகளைப் பட்சிக்கும் என்கிறார்?
11. எதில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்துகிறார்?
12. எது மனுபுத்திரரை விட்டு ஒழிந்து போயிற்று?
13. நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, எதைத் தேடுங்கள் என்கிறார்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

**பரிசு பெறும் 3 நபர்கள்:**
**1)செல்வமதி, தூத்துக்குடி**
**2)கனக லீலா, காமராஜ் நகர்**
**3)ஞானசில்வியா, நந்த கோபால்புரம்**
**4) ஞானமதி, ஏரல்**
**5)பிரேமலதா, தூத்துக்குடி**

## எங்களது வங்கி கணக்கு எண்:

***இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,***

**Name : J. Samuel Jebaraj**
**Bank : ICICI - Bank**
**A/c No. : 613901506045**
**IFC Code : ICIC 0006139**
**Branch : Tuticorin**

*UPI ID:*
***prjsjebaraj@okaxis***

## *இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:*

04.02.2025 – செவ்வாய்
**ஊழியர்கள் கூடுகை- திருநெல்வேலி.**

06,07.02.2025– வியாழன், வெள்ளி
**தலைவர்கள் கூடுகை- திருச்சி.**

09,10.02.2025– ஞாயிறு, திங்கள்
**கன்வென்ஷன்-மார்த்தாண்டம்.**

11.02.2025– செவ்வாய்
**ஜெப முகாம்- கன்னியாகுமரி.**

14.02.2025–வெள்ளி
**முழு இரவு ஜெபம்- ஏரல்.**

18.02.2025– செவ்வாய்
**ஊழியர்கள் உபவாச கூடுகை- திருநெல்வேலி.**

18.02.2025– செவ்வாய்
**முழு இரவு ஜெபம்-தூத்துக்குடி.**

21.02.2025–வெள்ளி
**முழு இரவு ஜெபம்-சாத்தான்குளம்.**

# ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

## உபவாச ஜெபம்

சனிதோறும் காலை 10:00 - 12:30

## பெண்கள் ஆராதனை

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

## அதிகாலை ஆராதனை

தினந்தோறும் காலை 6:00 - 6:40

## அமாவாசை ஜெபம்

அமாவாசை இரவு 10:00 - 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: 337 022 2215, PASSCODE: 1234

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ..............................................................................

..............................................................................

..............................................................................